DEREK PRINCE
MINISTRIES - INDIA

Free Copy



தேவனுடைய வாக்குத்தத்தங்களின்

தேசத்தில் நடை போடுதல் - PART 6

வழிநடத்துதல்

எனது பல்லாண்டு ஊழியத்தில், பல பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ள ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுக்கு நான் ஆலோசனை கொடுத்துள்ளேன். நான் கண்டடைந்துள்ள ஒரு மாறா உண்மை இதுதான்: வாழ்க்கையின் ஒவ்வொரு பிரச்சனையையும் எதிர்கொள்ளவும், மேற்கொள்ளவும், தேவன் தம்முடைய வார்த்தையில் நமக்கு பெரிதும், வல்லமையுமான வாக்குத்தத்தங்களை தந்துள்ளார். நம்முடைய பிரச்சனைகள் மாறுபடலாம், ஆனால் அடிப்படை காரணங்கள் மாறாது: பாவத்தின் உண்மை, பூரண இரட்சிப்பிற்கான தேவை, மன உபாதையின் பிரச்சனை மற்றும் நொடிக்கு நொடி தேவைப்படும் செயல்முறையான ஞானம். இவற்றில் சில கருப்பொருள்களை தான் நாம் "தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தின் வழியாய் நடைபோடுதல்" என்ற இத்தொடரில் பார்த்து வந்துள்ளோம்.

இதயத்தின் இதயம்

நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சூழ்நிலையிலும், தேவனுடைய குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை கண்டுப்பிடித்து, அவைகளை சுதந்தரிப்பது எப்படி என்பதே, இப்பாடங்களில், என்னுடைய நோக்கமாக இருந்துள்ளது. வேதத்தின் கோட்பாடுகளில் மிக பெரியதான ஒன்றின் செயல்முறை வெளிப்பாடு மற்றும் இப்பாடத் தொடரின் அடித்தலமாகவும் இருக்கும் ஒன்று தான் இது: என்னவென்றால், நமக்காக தேவன் ஏற்படுத்தியுள்ளது எல்லாம் அவருடைய வாக்குத்தத்தங்களில் உள்ளது, அந்த வாக்குத்தத்தங்களே நம்முடைய சுதந்திரமாக உள்ளன.

"நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும், சந்தர்பத்திலும் சரியான வழியை கண்டடைவதற்கு நமக்கு ஆலோசனை தேவை."

என்னுடைய முந்தைய கடிதத்தில், விசுவாசத்துடன் கேட்கிற யாவருக்கும் ஞானத்தை கொடுப்பதற்கான தேவனுடைய வாக்குத்தத்தை நாம் பார்த்தோம். வேதத்தில் கூறப்பட்டுள்ள ஞானம் "மிஞ்சின ஆவிக்குரியதும்" அல்ல, குழப்பமான இறையியல் சொற்களை புரிந்துக்கொள்வதை சார்ந்ததுமல்ல என்று நான் விளக்கினேன். மாறாக, அது எளிமையான, செயல்முறையான, தாழ்மையான ஒன்று என்றேன்.

இப்படிப்பட்ட செயல்முறையான ஞானம் தேவைப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதியை தான் நாம் இக்கடித்தத்தில் கவனிக்க போகிறோம். எனது கருப்பொருளை ஒரே வார்த்தையில் அடக்கிவிடலாம்: ஆலோசனை அல்லது வழிகாட்டுதல். உண்மை என்னவெனில், நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும், சந்தர்பத்திலும் சரியான வழியை கண்டடைவதற்கு நமக்கு ஆலோசனை தேவை. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இந்த தேவையை சந்திக்கும்.

சங்கீதம் 37:4-5ல் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களை பார்த்து, நாம் இந்த பகுதியை ஆரம்பிக்கலாம்:

"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்."

இந்த பகுதியை குறித்து சுவாரஸியமான ஒன்றை

நீங்கள் கவனித்திருக்கலாம்: இரண்டாம் வசனத்தின் வாக்குத்தத்தத்திற்கு தகுதி பெறும் நபரை தான் முதலாம் வசனம் விவரிக்கின்றது. "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" என்பதே வாக்குத்தத்தம்.

வாக்குத்தத்தத்தை கவனிக்கும் முன், இவ்வாக்குத்தத்தத்தை பெறக்கூடிய நபரை குறித்து நாம் பார்க்கலாம். "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" என்று ஆண்டவர் கூறுகிறார். ஆனால் அதற்கு உண்மையான அர்த்தம் என்ன ?

இந்த வசனத்தை, நான் இளம் விசுவாசியாக இருந்தபோது, இப்படியாக புரிந்து வைத்திருந்தேன்: தேவன் விரும்புகிறதை நான் செய்தால், நான் விரும்புவதை அவர் எனக்கு தருவார். ஆனால், நான் முதிர்ச்சியடைய ஆரம்பித்த போதோ, இவ்வசனத்தில் உள்ள வாக்குத்தத்தம் அதிலும் ஆளமாக செல்கிறதென்று கண்டேன். இப்போது இவ்வசனத்தை நான் இப்படி புரிந்துக்கொண்டுள்ளேன் - நான் தேவனை உண்மையாகவே பிரியப்படுத்த தேடி, என்னுடைய திருப்தியை அவரில் கண்டடைந்தால் - அப்போது, அவர் என் இருதயத்தின் விருப்பங்களை எனக்கு கொடுப்பார். எப்படி அதை செய்வார்: பரிசுத்த ஆவியானவர் மூலம். அவர் நிறைவேற்ற விரும்பும் விருப்பங்களையே என் இருதயத்தில் பதித்து வைப்பார். என் விருப்பங்கள், சுயத்தை மையமாக கொண்டு, சுயத்தை திருப்தி செய்வதற்கு மாறாக, தேவனை மையமாக கொண்டு, தேவனை திருப்தி செய்பவைகளாய் மாறும்.

ஆகவே, கர்த்தரில் மகிழ்ந்திருப்பது, உங்கள் இருதயத்தின் விருப்பங்களில் ஒரு மாற்றத்தை கொண்டு வரும். சுயத்தை மையமாக கொண்டு, சுயத்தை திருப்தி செய்பவர்களாய் இருப்பதை விட, நீங்கள் தேவனை மையமாக கொண்டு, தேவனுக்கேற்றவைகளாக இருக்கும் விருப்பங்கள், நோக்கங்கள் மற்றும் லட்சியங்களை தேவனிடமிருந்து பெறுவீர்கள் - பரிசுத்த ஆவியானவர் மூலமாய். இன்னும் சொன்னால், அவ்வாஞ்சைகளை நிறைவேற்றி, லட்சியங்களை அடைய செய்யும் போது, தேவன் தம்மையே மகிமைப்படுத்தி, தம்முடைய இராஜ்ஜியத்தை விரிவாக்கிக்கொண்டே போவார். நமக்கும் மற்ற வர்களுக்கும் பல நேரத்தில் பாதகமாக இருக்கும் நம்முடைய சுயநலமான விருப்பங்கள் மற்றும் லட்சியங்களை விட, நமக்காக தேவன் கொண்டிருக்கும் விருப்பங்கள் எப்போதுமே மிகவும் பிரயோஜனமானவை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்று-கட்ட வாக்குத்தத்தம்

நம்முடைய வேத பகுதியின் இரண்டாம் பாகமாக இருக்கும் சங்கீதம் 37:5ன் வாக்குத்தத்தை நாம் இப்போது கவனிக்கலாம்.

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

இந்த வாக்குத்தத்தத்திற்கு, மூன்று தொடர்ச்சியான கட்டங்கள் உள்ளதாக நான் காண்கிறேன்.

முதலாவது ஒரு செயல்: "உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவி." ஒப்புவித்தல் அல்லது அர்ப்பணித்தல் என்பது ஒரே முறை செய்யப்பட வேண்டிய செயல். எதை ஒப்புவிக்கின்றோம் ? நம்முடைய "வழியை" - இது, நாம் சுமக்கும் பாரங்களையும், நாம் செய்திருக்கும் தீர்மானங்களையும் உட்படுத்தும்.

"உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவி," என்று சொல்லப்படும் இடத்தில், மூல எபிரெய மொழியில், "உன் வழியை கர்த்தர் மேல் உருட்டி விடு" என்று கூறப்பட்டுள்ளது. "உன் வழியை கர்த்தர் மேல் உருட்டி விடு" என்று சங்கீதக்காரன் ஏன் சொல்லுகிறார் ? என் தனிப்பட்ட அனுபவத்தின் பேரில், இந்த கேள்விக்கு நான் ஒரு குறிப்பிட்ட பதிலை வைத்திருக்கிறேன்.

ஒரு ஆசிரியரின் குழப்பம்

என் வாழ்க்கையின் ஒரு காலக்கட்டத்தில், நான் கிழக்கு ஆப்பரிக்காவில், ஆப்பரிக்க ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் ஒரு கல்லூரியின் முதல்வராக இருந்தேன். மேற்கத்திய நாடுகளின் பள்ளிக்களுக்கு மாறாக, கிழக்கு ஆப்பிரிக்காவில் கல்லூரி முதல்வர் எல்லாருக்கும் வேலைக்காரனாக இருந்தார். அவரே எல்லாவற்றையும் செய்ய வேண்டும். குழாயில் தண்ணீர் சொட்டினால், அதை அவர் சரி செய்ய வேண்டும். உணவு தட்டுப்பாடு ஏற்பட்டால், அவர் அதை சமாளிக்க வேண்டும். எங்கள் பள்ளியில், மாணவர்களுக்கு மிகவும் பிடித்த உணவு அரிசியாகும். ஆகவே, சமீபத்திலிருந்த பட்டணத்திற்கு போய் நான் அடிக்கடி அரிசி மூட்டைகளை வாங்கி வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவை ஒவ்வொன்றும், 112 பவுண்ட் எடை கொண்டதாகும். உணவு பொருட்கள் சேகரித்து வைக்கப்படும் பண்டகசாலையின் வாசலுக்கு அவைகளை என் வாகனத்தில் கொண்டு வர வேண்டியதிருந்தது.

அங்கே படித்துக்கொண்டிருந்த ஆப்பரிக்க மாணவர்கள், தாங்கள் கல்லூரியில் இருப்பதால், கைகளால் வேலை செய்வது தங்கள் அந்தஸ்திற்கு கீழானது என்ற மனநிலையை கொண்டிருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாய் இருக்க, வாகனத்தின் பின் ஏற்றப்பட்டிருக்கும் அரிசி மூட்டைகளை இரக்கி வைக்க நான் உதவி செய்வேன். நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அரிசி மூட்டையை முதுகில் ஏற்றி அதை அந்த சேமிப்பு கிடங்கிற்குள் தூக்கி செல்வது கடினமாக இருக்கவில்லை. என் முதுகை காயப்படுத்தாமல் இறக்கி வைப்பது தான் உண்மையான பிரச்சனையாக இருந்தது. அப்போது தான் கர்த்தர் மேல் பாரத்தை உருட்டி விடுவதை குறித்து கற்றுக்கொண்டேன். மூட்டையை மெதுவாக இறக்கி வைப்பதை விட, ஒரு சிறிய வேகமான வெட்டு விட்டால், அந்த சாக்கு என் முதுகிலிருந்து உருண்டு, கீழே தரையில் என் பக்கத்தில் நேராக நிற்கும் என்று கண்டுப்பிடித்தேன். இதை செய்வதில் மிகுந்த தேர்ச்சியும் பெற்றேன்.

"உன் வழியை கர்த்தர் மேல் உருட்டி விடு" என்று சங்கீதக்காரன் சொல்லும் போது, நாம் வாழ்க்கையை எப்படி கடந்து செல்ல தேர்வு செய்கிறோம் என்பது அந்த 112 பவுண்ட் மூட்டையை போன்றது. அதை தனியாக கையாள்வதற்கு அது மிகவும் பாரமானது; அந்த தீர்மானமும் பொறுப்பும் மிகவும் பெரியது. சங்கீதக்காரன், நம்மை பார்த்து, "அந்த மூட்டையை சுமக்க முயற்ச்சி செய்யாதே. உன் முதுகிலிருந்து

உருட்டி, அதை கர்த்தரின் பாதத்தண்டை விட்டுவிடு. அவர் அதை பார்த்துக்கொள்வார்" என்று கூறுகிறார். ஆகவே, இது தான் முதல் கட்டம்: "உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவி" அல்லது "உன் வழியை கர்த்தர் மேல் உருட்டி விடு."

எளிய நம்பிக்கை

நம்முடைய வாக்குத்தத்தத்தின் இரண்டாவது கட்டம் ஒரு மனநிலை - நம்பிக்கை. அர்ப்பணித்தல் அல்லது ஒப்புவித்தல் ஒரு ஒரு-முறை செயல்; நம்பிக்கை என்பது ஒரு தொடரும் மனநிலை. ஒரு முறை அர்ப்பணித்தால், நாம் தொடர்ந்து அர்ப்பணித்துக்கொண்டே இருப்பதில்லை. மாறாக, அது ஏற்கெனவே அர்ப்பணிக்கப்பட்டுவிட்டது, நாம் இப்போது செய்ய வேண்டியது, தொடர்ந்து நம்புவது தான் என்ற மனநிலையை நாம் எடுத்துக்கொள்கிறோம். அர்ப்பணிப்பு செயலாகும்; நம்பிக்கை மனநிலையாகும்.

தேவன் செய்துக்கொண்டிருக்கிறார்

ஆங்கில மொழிப்பெயர்ப்பில், மூன்றாவது கட்டம், "அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." ஆனால் எபிரெய மொழியில் இதை பார்த்தால், "தேவனே அதை வாய்க்கப்பண்ணிக்கொண்டிருக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது. இதை நான் இப்படியாக புரிந்துக்கொள்கிறேன்: முதலாவது நாம் வழியை கர்த்தருக்கு ஒப்புவிக்கிறோம்; பின்பு அசைவில்லாத, தொடரும் நம்பிக்கையின் மனநிலையை வெளிப்படுத்துகிறோம். காரியம் கர்த்தருடைய கையிலிருக்கிறது. நாம் எவ்வளவு காலம் நம்பிக்கையை கடைப்பிடிக்கிறோமோ, தேவன் செய்துக்கொண்டே இருக்கிறார். வேறு விதமாக சொன்னால், அவரிடம் ஒப்புவித்ததை அவர் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார். என்ன தீர்மானம், என்ன பாதை நாம் பின்பற்ற வேண்டுமோ, தேவன் அதை செயல்படுத்துகிறார்.

இது, வங்கிக்கு சென்று, சேமிப்பு கணக்கில் பணம் செலுத்துவது போன்றது. பணத்தை செலுத்துவது அர்ப்பணிப்பின் செயலாகும். அதற்கு பின், ஒவ்வொரு நாளும் நீங்கள் வங்கிக்கு சென்று, பணம் வட்டி பெறுகிறதா இல்லையா என்பதை சோதிப்பதில்லை. உங்கள் பணத்தோடு வங்கி வட்டியை கூட்டிக்கொண்டிருக்கிறது என்று உறுதியாய் நம்புகிறீர்கள். அதுவே தொடரும் நம்பிக்கையின் மனநிலை. நீங்கள் பணத்தை பத்திரமாக வங்கியில் செலுத்தி வைத்து, அந்த நம்பிக்கையின் மனநிலையுடன் தொடரும் வரை, வங்கி அதை செய்துக்கொண்டே இருக்கிறது. தேவனோடும் அதே நிலை தான். "உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவி, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவர் அதை வாய்க்கசெய்துக்கொண்டே இருக்கிறார்."

நம்முடைய பாதையை இயக்குதல்

இப்போது, தேவனிடமிருந்து வரும் இன்னொரு வழிநடத்துதலின் வாக்குத்தத்தத்தை நாம் பார்க்கலாம். இது நீதிமொழிகள் 3:5-6 வசனங்களில் உள்ளது:

> *உன் சுயபுத்தியின்மேன் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,*
>
> *உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.*

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

இதற்கு மாற்று மற்றும் ஏற்புடைய மொழிப்பெயர்ப்பு, "அவர் உன் பாதைகளை நடத்துவார்" என்பதே. தேவன் உங்கள் பாதைகளை நடத்துவார்; வாழ்க்கையின் வழியாய் உங்களுக்கு சரியான பாதையை அமைத்து கொடுப்பார். தற்காலத்தில் எல்லா சூழ்நிலைக்கும் தேவையான வாக்குத்தத்தம் அது. நிபந்தனைகள் என்ன ? ஒரு விதத்தில் இவை சங்கீதம் 37க்கு ஒத்திருக்கின்றன. முதலாவது நிபந்தனை "உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு." அந்த தொடரும் நம்பிக்கையின் மனநிலையை தக்கவைத்துக்கொள்ளுங்கள். நம்பிக்கையுடன் எப்போதுமே சமாதானம் வரும். நீங்கள் பதற்றமும் கலக்கமும் உள்ளவர்களாகும் போது, நீங்கள் நம்புவதை விட்டுவிட்டீர்கள் என்பதற்கு அது அடையாளம்.

> *தேவன் உங்கள் பாதைகளை நடத்துவார்; வாழ்க்கையின் வழியாய் உங்களுக்கு சரியான பாதையை அமைத்து கொடுப்பார்.*

இரண்டாவது நிபந்தனை எதிர்மறையானது: "உன் சுயபுத்தியின் மேல் சாயாமல்." உங்கள் சொந்த நிதானிப்பை நம்புவதற்கு திரும்பாதீர்கள். நீங்களே தீர்வு காண முயற்ச்சிக்காதீர்கள். நம்முடைய ஜெபங்களுக்கு பதில் பெறுவதற்கு பெரும் தடைகளில் ஒன்று என்னவென்றால், நாம் ஜெபிக்கின்றோம் - ஆனால் அதற்கு பின், நம்முடைய ஜெபத்திற்கு தேவன் எப்படி பதில் அளிக்க வேண்டும் என்பதை நாமே செயல்படுத்த முற்படுகிறோம் !

நம்முடைய ஜெபத்திற்கு, நாம் விரும்பும் விதமாக பதில்

அளிக்க தேவன் கட்டுப்பட்டவரல்ல. நாமே செயல்படுத்த முற்படும்போது, நமக்கு விரோதமாக செயல்படும் மனது மற்றும் ஆவியின் ஒரு மனநிலைக்குள்ளாக நாம் செல்கிறோம். தேவன் நம்முடைய சார்பாக செய்துக்கொண்டிருக்கும் அந்த பதிலை பெற, அந்த மனநிலை நமக்கு தடையாக அமைகிறது. ஆகவே, உங்கள் சுயபுத்தியின் மேல் சாயாதீர்கள்.

தேவனை அங்கீகரித்தல்

நீதிமொழிகள் 3ம் அதிகாரத்தில் மூன்றாவது நிபந்தனை, "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்" என்பதாகும். அதற்கு அர்த்தம் என்ன ? தேவனை நினைப்பது அல்லது அங்கீகரிப்பதை குறித்து நான் புரிந்துக்கொண்டதை விளக்குகிறேன். எந்த நொடியிலும், அல்லது சூழ்நிலையிலும், நேரத்திலோ காலத்திலோ, நீங்கள் நின்று, "தேவனே, எனக்கு நீர் காண்பித்த உண்மைக்காக நான் நன்றி சொல்கிறேன். ஏற்கெனவே நீர் எனக்கு செய்த நன்மைக்காக நான் நன்றி சொல்கிறேன். என் வாழ்க்கையின் பல சூழ்நிலைகளிலும், சந்தர்பங்களிலும், நீர் உம்மையே நிரூபித்து காட்டின விதத்திற்காக நன்றி. நீர் என்னை இவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கிறீர், நீர் தொடர்ந்து என்னை நடத்துவீர் என்று நம்புகிறேன்" என்று கூறுவதாகும். இப்படி தான் தேவனை உங்கள் வழிகளில் எல்லாம் அங்கீகரிக்க முடியும்.

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."

1964ல் ஒரு காலத்தை நான் நினைவுகூறுகிறேன். அப்போது பசிபிக் நார்த்வெஸ்ட் என்ற இடத்தில் இருந்த ஒரு நல்ல உத்தரவாதமிருந்த போதகர் வேலையை விட்டு நான் விலகினேன். என்னுடைய அடுத்த அடி, நிர்ணயிக்க பட்ட சம்பளம் இல்லாமல், நிறந்தர தங்குமிடம் இல்லாமல், சுற்றி திரிந்து போதக வேலை செய்வதற்கு அர்ப்பணிப்பதாக இருந்தது. எந்த சேமிப்பும் இல்லை - சொந்த வாகனம் கூட இல்லை. போஷிக்கப்பட வேண்டிய நிலையில், ஒரு மனைவியும், பிள்ளையும் இருந்தனர், இருந்தபோதிலும் தேவன் இந்த புதிய ஊழியத்தில் என்னை உந்தி தள்ளுகிறார் என்பதை அறிந்திருந்தேன்.

இந்த புதிய ஊழியத்தில் ஏதாவது உறுதியை காண்பிக்கும் அடையாளத்தை பெற நான் தேவனை நாடிக்கொண்டிருந்தபோது, நான் மேற்கூறின வசனத்தையே தேவன் எனக்கு கொடுத்தார்: "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." அந்நாள் துவங்கி, இடைப்பட்ட காலம் முழுவதிலும், அதை உண்மையென்று நிரூபித்துள்ளேன் என்பதை நான் சாட்சியாக அறிவிக்க விரும்புகிறேன். இந்த அழகான வாக்கியம் நம்பப்படக்கூடிய ஒன்று என்பதை நிரூபித்துள்ளேன். "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."

அவருக்கு நன்றி செலுத்துங்கள்

உங்கள் வாழ்வில் எப்போதெல்லாம் ஒரு திருப்புமுனை அல்லது தேர்வு செய்ய வேண்டிய நிலைக்கு வருகிறீர்களோ, சற்று நின்று தேவனை அங்கீகரிக்க ஆரம்பியுங்கள். அவர் உங்களுக்கு செய்த யாவற்றிற்காகவும் அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவருடைய உண்மைக்காக நன்றி செலுத்துங்கள். ஜெபங்களுக்கு பதில் அளித்து, கடந்த காலத்தில் பல பிரச்சனைகளை தீர்த்து வைத்த விதத்திற்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள். பின்பு, அவரை அங்கீகரித்து விட்டு, முன்பு செய்தது போலவே அவர் கடந்த காலத்தில் உண்மையுள்ளவராக இருந்தது போல, இனி வரும் காலத்திலும் உண்மையுள்ளவராக இருப்பார் என்று தொடர்ந்து நம்புங்கள். உங்கள் பாதையை நிச்சயம் நடத்துவார் என்பதை அறிந்துக்கொள்ளுங்கள்.

இந்த மாதத்தின் போதனை கடிதத்தை முடிவுக்கு கொண்டு வர நான் தேவனை அங்கீகரியுங்கள் என்று கூறினதே சிறந்த விதமாக இருக்கும். நான் அப்படிப்பட்ட ஒரு ஜெபத்தில் உங்களை வழிநடத்த, நீங்கள் என்னுடன் சேர்ந்து ஜெபிப்பீர்களா ?

தேவனே, நீர் எனக்கு மிகவும் நல்லவராக இருந்திருக்கிறீர் - என் தகுதிக்கும், நான் வேண்டிக்கொண்டதற்கும் மிகவும் அதிகமாக. ஒவ்வொரு அடியிலும் நீர் உண்மையுள்ளவராக இருந்துள்ளீர் - என்னை வழிநடத்தி, உதவி செய்து, தேவைகளை சந்தித்தீர்.

நான் எதிர்கொண்ட எல்லா சவால்களிலும், பிரச்சனை களிலும் நீர் எனக்கு உதவி செய்தீர். உம்முடைய உதவி தொடரும் என்பதை நான் அறிந்தும் விசுவாசித்தும் இருக்கிறேன். எனக்கு நீர் பாராட்டின அன்பிற்காகவும் உண்மைக்காகவும் நன்றி.

"என் வழிகளில் எல்லாம் நான் உம்மை அங்கீகரிக்கிறேன். என் பாதைகளை நீர் தொடர்ந்து நடத்துவீர் என்று அறிந்திருக்கிறேன்" என்று சங்கீதக்காரனுடன் நான் இணைந்து அறிவிக்கிறேன். இவை அனைத்திற்கும் நான் உமக்கு துதியையும் நன்றியையும் தெரிவிக்கிறேன் அன்பின் ஆண்டவரே. இயேசுவின் நாமத்தில்,

ஆமென்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp. Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

Derek Prince Ministries - India

www.derekprince.in